**சீதாவக பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து சீதாவக பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த உபகரண விடயமொன்றின் பெறுமதியாகிய ரூபா 18,950 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு ஜூன் 29 திகதி கிடைத்திருந்த 389 கொடிக் கம்பங்களின் பெறுமதி ரூபா 384,534 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பண வருமானம் என கணக்கீடு செய்திருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 15,000,000 தொகை தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 11,440,961 தொகை கிடைத்திருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய நீதிமன்றத் தண்டப்பண மிகை ஏற்பாடு ரூபா 3,559,039 பெறுமதியினை கணக்கீடு செய்யாமையால் திரண்ட நிதியக் கணக்கு மற்றும் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பண வருமானக் கணக்கு ரூபா 3,559,039 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருடாந்த நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 15,000,000 தொகை என கணக்கீடு செய்தல் சபையின் கணக்கீட்டுக் கொள்கையாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 19,000,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானக் கணக்கு ரூபா 4,000,000 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2015 திசெம்பர் மாதத்திற்கான செலுத்த வேண்டிய ரூபா 785,058 இற்கான பெறுமதி கூட்டிய வரியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) 2015 ஆண்டின் போது செலுத்தப்பட்ட பெறுமதி கூட்டிய வரியின் பெறுமதியாகிய ரூபா 5,859,034 தொகை பலவின வைப்புக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(எ) 2015 திசெம்பர் மாதத்திற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 74,502 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் மிகையாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 938,250 தொகையான மந்திரிமார் படி மீளளிப்புச் செய்தலை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் 2012 திசெம்பர் 06 திகதி சபைக்கு மானியமாக வழங்கியிருந்த வள்ளம் ஒன்று, வள்ள என்ஜின் ஒன்று மற்றும் 05 உயிர் பாதுகாப்பு மேலங்கிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களுக்காக பெற வேண்டிய வட்டிப் பெறுமதி ரூபா 15,109 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 6,500 தொகையான நிலுவை வாராந்த சந்தைக் கட்டணத்தை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்வதற்குப் பதிலாக நடைமுறையாண்டின் வாராந்த சந்தைக் கட்டண வருமானத்தில் இருந்து கழிக்கப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய ஆண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்தப்படாதிருந்த உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் திசெம்பர் மாதத்திற்கான கடன் தவணைப் பணத்தை கடன்கொடுத்தோர் என பதிவு செய்யாமையை சரிசெய்வதற்காக நடைமுறை ஆண்டின் போது பிழையான முறையில் நாட்குறிப்பு பதிவு செய்யப்பட்டிருந்தமையால் திரண்ட நிதிய மீதி ரூபா 681,801 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

4 கணக்கு விடயங்களின் கணக்கு மீதிகள் கணக்குகளின் பிரகாரம் மீதி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் மீதியை இணக்கஞ் செய்யும் போது ரூபா 897,658 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

பல வருட காலம் முதல் கணக்குகளில் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 2,780,398 தொகைக்கான 10 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

கூட்டுத்தொகை ரூபா 2,331,631 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை சான்றுகள் இன்மையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

#### (ஆ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 8,753,333 தொகைக்கான 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2010 மே 31 திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 33,896,818 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,364,439 தொகையாகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மக்கள் வங்கி ஹங்வெல்ல கிளையின் இலக்கம் 229-1-001-3826543 கொண்ட கணக்கு தொடர்பாக 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 6,110 இற்கான காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. வருமான நிருவாகம்

### 3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக செயலாளரினால் சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | ஜனவரி 01 திகதியில் நிலுவை | சிட்டை இடப்பட்ட | உள்ளவாறாக அறவிடப் பட்டவை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி | 6,533,272 | 10,239,591 | 10,881,061 | 5,891,802 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 1,483,777 | 1,483,777 | - |
| வாடகை | 548,632 | 4,496,449 | 4,089,617 | 955,464 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தக வரி | - | 2,212,330 | 2,212,330 | - |
| இறைச்சிக் கடை | 319,375 | 8,859,850 | 8,867,407 | 311,818 |

### 3.2 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திர பதிவேட்டின் பிரகாரம் பதிவு செய்துள்ள 15 நிறுவனங்களின் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த அனுமதிப்பத்திரத்தை நாளது வரை ஆக்கப்படாமையால் சபை ரூபா 73,800 தொகையொன்றினை இழந்துள்ளது.

## 3.3 விளம்பர அறிவித்தல் வருமானம்

சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 06 பிரயாணிகள் தரிப்பிடத்தில் அறிவித்தல் ஏதும் காட்சிப்படுத்தப்படாமையால் சபையின் எதிர்பார்த்த வருமானம் ரூபா 460,000 தொகையினை இழந்துள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) சபைக்குச் சொந்தமான பாதுக்க வாராந்த சந்தையின் அனைத்து வசதிகளையும் கொண்ட வாராந்த சந்தை ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்காக 2014 மே 24 திகதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வாராந்த சந்தையின் வருமானம் சேகரித்தல் நடைபெறுகின்றது. எனினும் நாளாந்தம் குப்பைகளை அகற்றி சந்தையை சுத்தம் செய்வதற்காக கடந்த 14 மாதங்களுக்காக ரூபா 1,715,714 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் குப்பைகளை சேகரித்தல் மற்றும் கற்களை அகற்றுவதற்காக செலுத்த வேண்டிய பணம் செலுத்துவதையும் நகர அபிவிருத்தி அதிகார சபை புறக்கணித்திருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கியதன் மூலம் கொழும்பு மாவட்ட செயலாளரினால் ரூபா 15,000,000 தொகை செலவிடப்பட்டு மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த சுதுவெல்ல தகனசாலையினை திறப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாதுக்க பழைய சந்தையின் பின்பகுதி தார் போடப்பட்டு வாகனத் தரிப்பிடம் ஒன்றாக செயற்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 536,742 தொகையான செலவு ஒன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் எதிர்ப்பார்த்த வருமானம் ஏதும் இது வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 850,000 தொகை பெறுமதியுடைய பயன்படுத்தப்படாமல் காணப்படும் டிரக்டர் வண்டி மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத கை டிரக்டர் சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

(உ) சபையினால் வாடகைக்கு கொடுத்திருந்த கடைகள், பொது இடங்கள் மற்றும் ஹங்வெல்ல புதிய வாராந்தச் சந்தை நிர்மாண வேலையின் மின்சார பில்பத்திரம் உரிய வாடகையாளர்களிடம் மற்றும் நிர்மாண வேலை ஒப்பந்தக்காரர்களிடம் அறவிடப்படாமல் சபை நிதியத்தில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 100,071 தொகைக்கான மின்சார பில்பத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,083,366 தொகையாக இருந்ததுடன் அம் மீதியில் அறவிடப்பட முடியாத 1992 ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 20,861 இற்கான தொகையொன்றும் அடங்கியிருந்தது.

(எ) ரூபா 2,478,204 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது புதிய பிரயாணிகள் தங்குமிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 173 இன் பிரகாரம் நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 129(எ) பிரிவுக்கு முரணாக வீதிக் கோட்டுச் சான்றிதழ் வைப்புத் தொகை, காணி உறுதிகள் பொழிப்பு வைப்புகள் (ATD) மற்றும் சாக்கடை பவுசர் சேவைக்காக பெற்றிருந்த ரூபா 26,560 தொகையான வருமானம் ஊழியர்களிடையே பகிரப்பட்டிருந்தது.

(ஐ) சபையில் 02 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 5,567,738 தொகையான வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்